# கோவை கேஎம்சிஎச் மருத்துவமனை

# இருதயவியல் அறுவை சிகிச்சையில் சாதனை

கோவை, ஏப்.27:

கே.எம்.சி.எச். மருத்துவமனை இருதயவியல் துறையில் சார்ந்த அறுவை சிகிச்சை மூலம் சாதனை படைத்துள்ளது.

கோவை மெடிக்கல் சென்டர் அண்டு ஹாஸ்பிடல் இருதயவியல் துறையின் கார்டியாக் சர்ஜரி சிகிச்சையில் 150 நோயாளி இருதய துடிப்பை நிறுத்தாமல் அறுவை சிகிச்சையை செய்துள்ளது. இந்த சிகிச்சை 'ஆஃப் பம்ப் பைபாஸ்' என்ற நவீன முறையில் செய்து சாதனை படைத்துள்ளது. கடந்த5 மாதங்களில் இந்த சிகிச்சைகள் செய்யப்பட்ட நோயாளிகள் 100 சதவிகிதம் பூரண குணமடைந்துள்ளார்கள்.

இந்த அறுவை சிகிச்சை குறைந்த உட்திறப்புடன், நோயாளிகளுக்கு சிரமம் இல்லாமல், ஸ்டெபிலைசர்கள் மற்றும் இருதய பொசிஸனர்ஸ் என்ற அறிய சிகிச்சையாகும்.

மேலும் இந்த சிகிச்சை மருத்துவ மனையின் இருதயவியல் துறை நிபுணர் டாக்டர் வி.நந்தகுமார் தலைமையில் டாக்டர்கள் குழுவால் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.